www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 5th Term Examination – 2022

FWC

அரசியல் விஞ்ஞானம் I
Political Science I

Two Hours
Gr -13 (2022)

23 | T | I

சுட்டெண்……………..……

**அறிவுறுத்தல்கள்**

- ❖ **இவ்வினாத்தாள் A, B ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.**
- ❖ **பகுதி A பல்தேர்வு வினாக்கள் *30* இனையும் பகுதி B குறுவிடை வினாக்கள் *20* இனையும் கொண்டுள்ளது.**
- ❖ **சகல வினாக்களுக்கும் இவ்வினாப்பத்திரத்திலேயே விடையளித்தல் வேண்டும்.**
- ❖ **ஒவ்வொரு வினாவுக்கும் *2* புள்ளிகள் வீதம் மொத்தம் *100* புள்ளிகள் வழங்கப்படும்.**

## பகுதி A

❖ ***1* முதல் *20* வரையிலான வினாக்களுக்கு மிகச்சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. அரசியல் என்பது,
    1) ஒரு சமூக செயற்பாடு மாத்திரமேயாகும்.
    2) அரச நிர்வாகம், அரசாட்சி மற்றும் சமூகப் பயன்பாடாகவும் காணப்படுகிறது.
    3) அரச நிர்வாகம், அதிகார பிரயோகம், அரசாட்சி என்பவற்றுடன் மாத்திரம் தொடர்புபட்டதாகும்.
    4) அரசின் ஆள்புல பிரதேசத்துடன் வரையறுக்கப்பட்டதாகும்.
    5) கற்கை துறைக்கு அப்பாற்பட்டதாகும். (………..)

02. அரசியல் விஞ்ஞானம் என்பது
    1) மனித அறவியலைக் கற்றல் என்பதாகும்.
    2) அரசியல் அதிகாரத்தையும் அதிகாரப் போட்டியையும் கற்பதுடன் எல்லைப்படுத்தப்பட்டதாகும்.
    3) அரசு, அரசாங்கம் போன்ற அரசியல் தாபனங்களுடன் மட்டுப்படுத்தப்பட்ட துறையாகும்.
    4) சமூக அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் பிரதானிகளின் இயல்பினை கற்கும் துறையாகும்.
    5) அரசை மையமாகக் கொண்டு அதன் நலா புறமும் பரந்துள்ள துணை பிரிவுகளையும் கற்கும் துறையாகும். (………..)

03. அரசு என்பது.
    1) நிச்சயமான ஆள்புல பிரதேசத்தில் அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த நிலையான மக்கள் குழுவாகும்.
    2) சமகால அரசியலில் "சர்வதேச அரசியலின் அடிப்படை" என்ற அந்தஸ்தில் இருந்து கீழ்ப்பட்டுள்ளது.
    3) சமூகத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக தோற்றுவிக்கப்பட்ட அமைப்புகளில் ஒன்று மட்டுமாகும்.
    4) ஆள்புலத்திற்கு வெளியில் அனைத்து அமைப்புக்களையும் கட்டுப்படுத்தும் அதிகார ஸ்தாபனமாகும்.
    5) ஆள்புலம் வரையறுக்கப்பட்ட அமைப்பு அல்ல. (………..)

04. அரசாங்கம் என்பது.
    1) ஜனநாயக முறைகளில் எல்லைப்படுத்தப்படாத காலப்பகுதியை செயற்பரப்பாக கொண்டது.
    2) அணைத்தாண்மை முறைகளில் மக்கள் ஆணைக்கு கட்டுப்பட்ட அமைப்பு ஆகும்.
    3) அரசின் விருப்பத்தினையும் செயற்பாடுகளையும் நடைமுறைப்படுத்தும் கருவியாகும்.
    4) விமர்சனம், மக்கள் அபிப்பிராயம் என்பவற்றுக்கு அப்பாற்பட்ட அமைப்பு ஆகும்.
    5) விபரிக்க முடியாத ஒன்று ஆகும். (………..)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

05. நடத்தைவாத அணுகுமுறை என்பது.
   1) அவதானிக்க கூடிய அரசியல் நடத்தையை ஆய்வு செய்கின்றது.
   2) மனிதனின் அகச் செயற்பாடுகளிற்கு முக்கியம் வழங்குகின்றது.
   3) அனுபவவாதத்தினை ஆய்வின் கருப் பொருளாகக் கொண்டது.
   4) அரசியல் ஜம்பவான்களின் வாழ்வியல் முறைகளை ஆய்வு செய்கிறது.
   5) அரசியல் நிறுவனங்களின் பங்கு பணிகளை ஆய்வு செய்கிறது. (………..)

06. ஒற்றையாட்சி அரசங்க முறையின் அம்சமானது
   1) மத்திக்கு பணிந்து செயற்படும் பிராந்திய அலகுகள்.
   2) பகிரப்பட்ட இறைமையைக் கொண்ட பிராந்திய அலகுகளின் செயற்பாடு
   3) பிராந்திய அலகுகளின் ஒத்துழைப்பு யாப்புத்திருத்தத்திற்கான முக்கிய நிபந்தனையாதல்
   4) பல அதிகார நிறுவனங்கள் நடைமுறையில் காணப்படும்.
   5) வழமையாக மந்திரி சபை அரசாங்க முறை என்று அறியப்படுகிறது. (………..)

07. மந்திரி சபை அரசாங்க முறை என்பது.
   1) பன்மைத்துவ சமூக சிக்கார்ந்த பிரச்சினைகளை தீர்வுபடுத்த இன்றியமையாத முறையாகும்.
   2) தேர்தலில் நிர்ணயிக்கப்படும் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளில் பலத்தினை அடிப்படையாக கொண்டது.
   3) மக்களாட்சிப் பண்புகள் சிதறடிக்கப்பட்ட அனைத்தாண்மை முறையாகவுள்ளது.
   4) அரசியல் நிறைவேற்றுத்துறையிடம் அரச தலைமைத்துவம் ஒப்படைக்கப்பட்டது.
   5) பலமான நிறைவேற்று நிர்வாக முறையின் ஆளுகைக்குட்பட்ட ஆட்சி முறை (………..)

08. தாராண்மை வாதத்தின் இயல்பாக கொள்ளப்படுவது
   1) தாராண்மை வாதத்தில் அரச தனியுடமை மத்தியமயமான இடத்தை பெறுகிறது.
   2) தாராண்மை வாதத்தின் எழுற்சியும் முதலாளித்துவத்தின் வளற்சியும் பரஸ்பரம் தொடர்புடையன.
   3) தாராண்மை வாதம் பலமான அரசாங்கத்தினை விருப்புகிறது.
   4) கால ஒட்டத்தில் தாராண்மை வாதம் அரசு ஆதிபத்தினை பிரதான விடயமாக ஏற்றுக் கொண்டுள்ளது.
   5) சந்தை சக்திக்கு மேலால் நுகர்வு பயன்பாட்டை ஏற்றுக் கொள்கின்றது. (………..)

09. சமதர்ம அரசாங்க முறையின் பிரதான பண்புகளாவன.
   1) அரசியல் சுதந்திரத்திற்கு மேலால் பொருளாதார சமத்துவத்தை வலியுறுத்துகிறது.
   2) தனிப்பட்டவரின் மத்திய மயமான பொருளாதார முறைமைக்கு முதன்மை நிலை வழங்குதல்.
   3) பொது மனிதத்துவத்தின் இருப்பு மற்றும் சமூக அசமத்துவம் என்பவற்றுக்கு முக்கியத்துவம் அளித்தல்.
   4) மிகை இலாப நோக்கமாக கொண்டு உச்ச வளப்பயன்பாட்டிற்கு முதலிடம் வழங்குதல்.
   5) பொருளாதார வளங்கள் சந்தைப்பரிமாற்றங்கள் கட்புலனாகாத சக்திகள் என்பவற்றால் முகாமை செய்யப்படல். (………..)

10. அரசியல் கட்சிகள் என்பது.
   1) தனி மனித ஆட்சியதிகாரத்தின் இருப்பிற்கு பங்காற்றுகின்றது.
   2) புராதன கிரேக்க காலமளவிற்கு பழமையான நீண்ட வரலாற்றை கொண்டது.
   3) வாக்குரிமை, பிரதிநிதித்துவம் என்பவற்றை தோற்றத்திற்கான பிரதான காரணியாகக் கொண்டது.
   4) ஜனநாயகமல்லாத முறைகளிலும் அரசியல் சமூகமயமாக்கத்தில் இன்றியமையாதது
   5) ஒத்த கருத்தியல்களின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள மக்கள் குழுக்களாகும். (………..)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

11. அமுக்கக் குழுக்கள் என்பது.
   1) அரசாங்கத்தினுள் சென்று அதனூடாக அரச கொள்கை தீர்மானங்களுக்கு அழுத்தம் கொடுக்கும் ஒழுங்கமைப்புகளாகும்.
   2) அரசியல் கட்சிகளோடு போட்டியிடுவதற்கு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள மக்கள் குழுக்களாகும்.
   3) குழுவாக ஒன்றிணைந்து அரச சட்டம், கொள்கை தீர்மானங்களுக்கு அழுத்தம் கொடுப்பது ஆசைக்குழுக்களின் பிரதான பணியாகும்.
   4) மக்களை பிரதிநிதித்துவ அரசாங்க முறைக்கு இட்டுச் செல்லும் பிரதான கருவியாகும்.
   5) நிறுவன முறைமை யாப்புசார் வரையறை, பணித்தொகுதி, உறுப்புரிமை, அலுவலக முறை என்பவற்றை கொண்ட ஒழுங்கமைப்புகளாகும். (………..)

12. பெண்ணியல் வாதம் என்பது.
   1) தொழில் பங்கீட்டில் ஆண்களை விட மேலான்மையை கோரி நிற்கின்றது.
   2) கிரேக்க கால பெண்களின் பிரஜாவுரிமையை வலியுறுத்துகின்றது.
   3) கருத்தியல் என்ற வகையில் இருபதாம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் அரசியலில் தாக்கம் செலுத்தியது.
   4) பிதா வழி தலைமைத்துவத்தின் இன்றியமையாமையை ரெடிகல் பெண்ணியல் வாதம் ஏற்கின்றது.
   5) பெண்களின் உடலியல் தொடர்பான தீர்மானங்களை எடுக்கும் உரிமை ஜனநாயகப் பெண்ணியல் வாதம் மூலம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. (………..)

13. பாசிச வாத கருத்தியலானது.
   1) பொது நலனுக்காக ஒழுங்குபடுத்தப்பட்ட சங்கமாக அரசை ஏற்கிறது.
   2) தனிப்பட்டவர்கள் அரசின் நலன்களுக்கு சேவை செய்தல் அவசியம் என்பதை ஏற்கிறது.
   3) தேசத்தையும் போரினையும் விட மேம்பட்ட பொது நலனை வலியுறுத்துகிறது.
   4) சமூக சமத்துவம் என்ற சிந்தனை வலுப்பெறும் போது அரசு அற்றுவிடும் என வாதிடுகிறது.
   5) ஒவ்வொருவருக்கும் அவரது திறமைக்கு ஏற்பவும் அவர்களது தேவைகளுக்கு ஏற்பவும் அரசு சேவையாற்ற வேண்டும் என குறிப்பிடுகிறது. (………..)

14. அர்த்த சமஷ்டி அரசாங்க முறை என்பது.
   1) ஐக்கிய அமெரிக்க பழம் சமஷ்டி பண்புகளைக் கொண்டுள்ளது.
   2) பொருளாதார மேம்பாட்டை அடைவதற்காக மூன்றாம் மண்டல நாடுகள் பின்பற்றும் உபாயமாகும்.
   3) பொதுப் பண அலகு கட்டுப்பாடற்ற சுயாதீன வர்த்தக கொடுக்கல் வாங்கலை இலக்காக கொண்டது.
   4) மைய மற்றும் ஓர அரச மட்டங்களிலான இருமைத்தன்மையான குடியுரிமையை கொண்டுள்ளது.
   5) ஒற்றை மற்றும் சமஷ்டி பண்புகளின் கலவையாக காணப்படுகிறது. (………..)

15. முரண்பாடு என்பது.
   1) ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாத நோக்கங்களையுடைய தரப்பினரிடையே ஏற்படும் நிகழ்வு ஆகும்.
   2) முரண்பாடொன்று வன்முறையாக மாறுவதை தடுப்பதற்கு ஆயுதப்பரிகரணம் மட்டுமே சாத்தியமான வழிமுறையாகும்.
   3) அடிமட்ட சமாதான முயற்சிகளை மாத்திரம் தைரியப்படுத்துதல் முரண்பாட்டுடன் தொடர்பான சமாதானத்தை கட்டி எழுப்புதலின் அடிப்படை இலக்காகும்.
   4) முரண்பாடுகள் சமூக அசைவிற்கு எவ்வகையிலும் காரணமாவதில்லை
   5) முரண்பாடும் சமூக வாழ்க்கையும் ஒன்றுக்கொன்று எதிரானவையாகும். (………..)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

16. கோல்புறூக் - கமரன் சீர்திருத்தங்களால் ஊக்குவிக்கப்பட்ட காலணித்துவ பொருளாதார முறைமை
   1) நாட்டின் பொருளாதாரத்தை சர்வதேச பொருளாதாரத்தில் இருந்து தனிமைப்படுத்தியது.
   2) குடியான் விவசாயம் பொருளாதாரத்தின் கேந்திர முதலீட்டு துறையாக மாற காரணமாகியது.
   3) முதலாளித்துவ முயற்சியாண்மையால் கவரத்தக்கவாறு சுதேச சமூகத்தை மாற்றியமைத்தது.
   4) சுய பூர்த்தி நிலை பொருளாதார முறைக்கு இட்டுச் சென்றது.
   5) சுதேசிகளின் பெருந்தோட்ட பயிற் செய்கைக்கான வாய்ப்புக்களை கீழ்ப்படுத்தியது. (………..)

17. பிரித்தானியராட்சிக் காலத்தில் இடம் பெற்ற அரசியலமைப்பு மாற்றங்கள்.
   1) 1833 – 1910 வரையில் ஆளுநரின் தன்னிச்சையான ஆட்சி மேம்பாட்டிற்கு வழிவகுத்தது.
   2) 1910 – 1924 காலப்பகுதியில் சுதேசப் பிரதிநிதித்துவ முறையின் அபிவிருத்திக்கு வழிவகுத்தது.
   3) 1931 – 1947 காலப்பகுதியில் நிபந்தனை அடிப்படையிலான உயர்குழாமினருடன் வரையறுக்கப்பட்ட அரசியல் பங்கு பற்றலுக்கு வழிகோலியது.
   4) 1947 – 1972 காலப்பகுதியில் இலங்கையர் பூரண குடியுரிமையைப் பெற வழிவகுத்தது.
   5) 1972 – 1978 காலப்பகுதியில் வெஸ்ற் மின்ஸ்டர் முறைக்கு புறம்பான ஆட்சி முறைக்கு வழிவகுத்தது. (………..)

18. 1931 டொனமூர் சீர்திருத்தம் மூலம்
   1) அரசாங்க உத்தியோகத்தர்கள் தவிர ஏனைய அரசுக் கழக அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட வழிவகுத்தது.
   2) முழுமையான மக்கள் இறைமைக்கு வழி வகுத்தது.
   3) கோல்புறூக் கமறன் எதிர்பார்த்த தலையிடா அரசமுறையைப் பலப்படுத்தியது
   4) நிபந்தனை அடிப்படையிலான வாக்குரிமை தளர்வடைய காரணமாகியது.
   5) குடியேற்ற நாட்டாட்சி உறுதி பெற்றமை (………..)

19. 1947 சோல்பரி அரசியல் யாப்பு.
   1) இலங்கையர் வெளிவிவகாரத்தை மேற்கொள்ள பூரணசுதந்திரத்தையும் ஆணை அதிகாரத்தையும் வழங்கியது
   2) இறுதி மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தை பெற்ற உயர் நீதிமன்றத்தின் கீழான நீதித்துறை உருவாக காலாகியது
   3) அரசியல் நிறைவேற்றுப்பகுதியின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட சுதந்திரமற்ற சிவில் நிர்வாக முறைமை உருவாக வழிவகுத்தது.
   4) சட்டவாக்கம் தொடர்பாக வரையறுக்கப்பட்ட அதிகாரத்தை வழங்கியது.
   5) நிறைவேற்றுக் குழு முறையிலமைந்த நிர்வாக முறையை சிபார்சு செய்தது. (………..)

20. 1947 சோல்பரி அரசியலமைப்பின் மெச்சத்தக்க விடயம்
   1) சிவில் சேவை மற்றும் நீதிச் சேவை சுதந்திரம் உட்பட்ட சிறுபான்மைக் குழுக்களின் உரிமைகளுக்கான காப்பீட்டு ஏற்பாடுகள்.
   2) அதிகமான தடைகள் சமன்பாடுகளை கொண்ட அரசாங்க முறை.
   3) பொறுப்புக் கூறலில் இருந்து விடுபட்டு செயற்படும் சுயாதீனமான நிறைவேற்றுத்துறை
   4) நாம நிறைவேற்றுப் பகுதியின் தலைமைக்குட்பட்ட அரசியல் நிறைவேற்றுப் பகுதி.
   5) சட்டவாக்க இறைமையுடன் கூடிய தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுடன் வரையறுக்கப்பட்ட சட்ட மன்றம். (………..)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

- **21 தொடக்கம் 25 வரையிலான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள கூற்றுக்களில் இருந்து சரியான கூற்றுத் தொகுதியைக் கொண்ட விடையை தெரிவு செய்க.**

21. இலங்கை ஒரு குடியரசாகியமையின் விளைவுகள்.

A- இலங்கை ஒரு முடியாட்சி அரசு என்ற சட்ட அந்தஸ்து இல்லாதொழிந்தது.

B- உண்மை நிறைவேற்றாளரால் நியமிக்கப்பட்ட நாம நிறைவேற்றாளர் அரசின் தலைவராகியமை.

C- நீதி வரையறைகளுடன் இணைந்த அடிப்படை உரிமைகளை இலங்கையர் அனுபவிக்க முடிந்தது.

D- சட்ட மன்றம் அரசின் மீயுயர் கருவியாகியமை.

E- பொறுப்புடைய அரசாங்கம் உருவாகியமை

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

(………..)

22. பல்வேறு அரசுகளின் அரசியலமைப்பு முறையை சரியாக விளக்கும் கூற்றுக்களின் தொகுதி.

A- ஐக்கிய அமெரிக்கா அரசியலமைப்பு மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களை மாத்திரம் பட்டியலிட்டுள்ளது.

B- சுவிற்சிலாந்து பங்கீட்டு ஆட்சி, சுய ஆட்சி என்பவற்றினை இலகுபடுத்தும் அரசியலமைப்பு மூலதத்துவங்களைக் கொண்டுள்ள நாடாகும்.

C- பிரான்சிய அரசியலமைப்பின் பிரகாரம் நிறைவேற்றுத்துறைக்கு பொறுப்பான ஜனாதிபதி தேர்வாளர் கழகம் ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்படுகின்றார்.

D- ஐக்கிய அமெரிக்க மேற்சபையில் மாநில அரசுகளின் பிரதிநிதித்துவத்தில் அசமநிலை காணப்படுகிறது.

E- பிரித்தானிய அரசாங்க முறையில் மரபுகள் மற்றும் சம்பிரதாயங்கள் அரசியலமைப்பின் பகுதிகளாக காணப்படுகின்றன.

1) ABCD 2) BCDE 3) A,B மற்றும் E 4) A,B,C மற்றும் E 5) C,D மட்டுமாகும்

(………..)

23. பொதுக் கொள்கை தொடர்பான சரியான சேர்மானங்கள்.

A- பொது மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான உபாயங்களை தீர்மானிக்கின்றது.

B- சிவில் சமூக அமைப்புக்கள் பொதுக் கொள்கை உருவாக்கத்தில் சமூக ரீதியாக ஒதுக்கப்பட்டுள்ள குழுக்களின் நலன்களை ஊக்குவிக்கின்றன.

C- தனியாட்களின் மனக்குறைகளை தீர்ப்பதுடன் தொடர்பான விதிமுறையாகும்.

D- பொதுக் கொள்கையின் பெறுபேறுகள் தொடர்பாக பிரஜைகளுக்கு விழிப்புணர்வூட்டுவதில் அரசியல் கட்சிகள் காத்திரமான பங்கினை ஆற்றுகின்றன.

E- பொதுக் கொள்கை அமுலாக்க செயல்முறையில் பணித்துறை நிர்வாகம்/ பணியக அமைப்பு இன்றியமையாததாக காணப்படுகிறது.

1) A,B,D மற்றும் E 2) B,C,D,E 3) A,B,C மட்டும் 4) A,C,D,E 5) A,B,C,E

(………..)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

24. சட்டத்தின் ஆட்சி என்பது.

A- தாராள ஜனநாய முறையின் பிரதான அங்கமாகும்.

B- ஆட்சியாளனின் உச்ச அதிகார பிரயோகத்திற்கு அங்கீகாரமளிக்கிறது.

C- பிரத்தியேக சட்டம், பிரத்தியேகமான நீதி என்பவற்றை ஆட்சியாளனுக்கு உரித்தாக்குகிறது.

D- ஆட்சியாளன் பொறுப்புக் கூறலின்றி செயற்படுவதை தடுக்கிறது.

E- நீதித்துறையின் சுதந்திரம், யாப்புறுவாதம் என்பவற்றுக்கு வலுச் சேர்க்கிறது.

1) A,B,C,D 2) B,C,D,E 3) A,B,D,E 4) A,D,E 5) C,D,E

(………..)

25. 1978 இன் இரண்டாம் குடியரசு யாப்பின் பிரகாரம் ஜனாதிபதி பதவி வறிதாகும் சந்தர்ப்பங்களாவன

A- ஜனாதிபதி இறக்கும்போதோ தனது பதவியை இராஜனாமா செய்யும் போதோ

B- யாப்பு விதிகளின் பிரகாரம் பாராளுமன்ற பழிமாட்டிறைவினூடாக பதவி அகற்றப்படும் போது

C- ஜனாதிபதியின் அக்கிராசன உரையை பாராளுமன்றம் தோற்கடிக்கும் போது

D- இலங்கை பிரஜை என்ற அந்தஸ்தை ஜனாதிபதி இழக்கும் போது

E- ஜனாதிபதி தேர்தலில் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி தனது பதவியை ஏற்காத போது

1) A,B,C,D 2) B,C,D,E 3) A,B,D,E 4) A,C,D,E 5) A,B,C,E

(…………)

❖ **26 தொடக்கம் 30 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் இரு கூற்றுக்களை கொண்டுள்ளன. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள 1,2,3,4,5 ஆகிய விடைகளில் இருந்து தரப்பட்டுள்ள இரு கூற்றுகளுக்கும் மிகச் சரியாக பொருந்தும் விடை இலக்கத்தினை தெரிவு செய்து அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

| இலக்கம் | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| (1) | உண்மை | உண்மை |
| (2) | உண்மை | பொய் |
| (3) | பொய் | உண்மை |
| (4) | பொய் | பொய் |
| (5) | உண்மை | உண்மையாக உள்ளதுடன் முதலாம் கூற்றை மேலும் விபரிக்கிறது |

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| 26. | 1978 ஆம் ஆண்டு யாப்பானது சட்ட மன்ற உறுப்பினர் எண்ணிக்கையை 225 ஆக வரையறை செய்தது. | யாப்பின் பிரகாரம் 22 தேர்தல் மாவட்டங்களில் இருந்தும் விகிதசார பிரதிநிதித்துவ முறைப்படி 196 உறுப்பினர்களும் (இவர்களில் மாகாண போணஸ் ஆசனங்கள் 36ம்) மற்றும் தேசியப் பட்டியலுக்கு அமைய 29 உறுப்பினர்களுமாக 225 உறுப்பினர்கள் பராளுமன்றத்திற்கு வரை யரை செய்யப்பட்டுள்ளது. (………..) |
| 27. | 1978ம் ஆண்டு அரசியலமைப்பிற்கான 13 வது திருத்தம் சுய நிர்ணய உரிமையுடன் கூடிய மாகாண சபை முறையை அறிமுகம் செய்தது | ஆரம்பத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைக்கப்பட்டு ஒரு மாகாண சபையாகவும் ஏனைய மாகாணங்கள் தனித்தனி மாகாண சபைகளாகவும் காணப்பட்டது. 2007ம் ஆண்டு வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் தனித்தனியாக்கப்பட்டன. (………..) |



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

| | | |
|---|---|---|
| 28. | 1947 முதல் 1977ம் ஆண்டு வரை சனத்தொகை, நிலப்பரப்பு என்பவை தொகுதி பிரிப்பிற்கான அடிப்படையாக காணப்பட்டது. | 1977 இன் பின் தேர்தல் மாவட்ட முறை அறிமுகப்படுத்தப்பட்ட மையால் 22 தேர்தல் மாவட்டங்கள் யாப்பு ரீதியாக அங்கீகரிக் கப்பட்டன வடக்கு மாகாணம் இரு தேர்தல் மாவட்டமாகவும் ஏனையவை தனித்தனி யாகவும் வரையறுக்கப்பட்டது. (…………) |
| 29. | 1947 – 1959 வரை காணப்பட்ட சனப்பிரதிநிதிகள் சபை 101 உறுப்பினர்களை கொண்டிருந்தது. 95 உறுப்பினர்கள் மக்கள் தெரிவு மூலமும் 06 பேர் நியமன பிரதிநிதித்துவமுமாக காணப்பட்டனர். | 1947ம் ஆண்டு சுதந்திர கட்டளை சட்டப் படி இலங்கை தொடர்பான சட்டங்களை ஆக்கும் பிரித்தானிய பாராளுமன்ற அதிகாரம் வலுவற்றதாக்கப்பட்டது. (………..) |
| 30. | 1947 மற்றும் 1972ம் ஆண்டு அரசியலமைப்புகளின் கீழ் அரச சேவையின் சுயாதீனத்தை பாதுகாக்கும் விதிமுறைகள் ஏற்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. | 1972 அரசியலமைப்பின் படி நீதி முறை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாற்றமாக இராணியார் நீதிமன்றுக்கு மேன் முறையீடு செய்யும் உரிமை வழங்கப்பட்டமை சிறப்பானதாகும். (………..) |

## பகுதி - B

31. இலட்சிய வாத அணுகுமுறையினை அரசியல் ஆய்வில் பயன்படுத்திய கிரேக்க தத்துவஞானி **ஒருவரையும்**, இந்திய அரசியல் சிந்தனையாளர் **ஒருவரையும்** முறையே குறிப்பிடுக.

1. ……………………………………………………………………………………………

2. ……………………………………………………………………………………………

.

32. கிரேக்கத்தில் அரசியலை முறையான ஒரு கற்கையாக கற்பிப்பதற்கு இரு பிரதான கற்கை கூடங்கள் அடிப்படையாக அமைந்தன அவ் **இரு** கற்கை கூடங்களையும் குறிப்பிடுக.

1. ……………………………………………………………………………………………

2. ……………………………………………………………………………………………

33. புராதன கிரேக்கத்தில் அரசியல் சிந்தனைகள் வெளிப்படுத்தப்பட காரணமாகிய **இரண்டு** நூல்கள் முக்கியம் பெற்று காணப்பட்டன அவை **இரண்டினையும்** குறிப்பிடுக.

1. ……………………………………………………………………………………………

2. ……………………………………………………………………………………………

34. நவீன அரசியல் மற்றும் சமூக சிந்தனைகளில் அரசறிவியல் கோட்பாடு என்பதற்கு இரண்டு விளக்கங்கள் காணப்படுகின்றன. அவை **இரண்டினையும்** குறிப்பிடுக.

1. ……………………………………………………………………………………………

2. ……………………………………………………………………………………………

35. ஒப்பீட்டு அரசியலை தமது ஆய்வுகளுக்கு பயன்படுத்திய முக்கியமான கிரேக்கதத்துவ சிந்தனையாளர் **ஒருவரையும்** ஐரோப்பிய தத்துவஞானி **ஒருவரையும்** முறையே குறிப்பிடுக.

1. ……………………………………………………………………………………………

2. ……………………………………………………………………………………………



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

36. ஆரம்பகால அரச மாதிரிகளில் ஒன்றான கோத்திர அரச முறைக்கு சிறப்பான உதாரணமாக கொள்ளக் கூடிய **இரண்டு** கோத்திர அரசுகளைக் குறிப்பிடுக.

1. ……………………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………………

37. பாசிச ஆட்சியாளர்கள் அரசு தொடர்பாக முன்வைத்த வரையறைகளில் இரு வரைவிலக்கணங்கள் மிகவும் பிரபல்யமானவையாகும். அவை **இரண்டினையும்** குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………
2) ……………………………………………………………………………………………

38. பின்வரும் எண்ணக்கருக்களுடன் தொடர்புபட்ட இரண்டு அறிஞர்கள்/ சிந்தனையாளர்கள் முக்கியம் பெறுகின்றனர் அவ் **இருவரையும்** குறிப்பிடுக.

1) செயற்பாட்டுப் பிரஜை ……………………………………………………………..
2) சமூக பிராஜாவுரிமை ………...……………………………………………………

39. சமூக ஒப்பந்தக் கோட்பாட்டாளர் தமது கருத்துக்களை தெளிவுபடுத்த சமூகத்தை இரண்டு பிரிவுகளாக வகைப்படுத்தினர். இவ் **இரு** வகைகளையும் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………
2) ……………………………………………………………………………………………

40. **"ஒற்றையாட்சிப் பண்புகள் மற்றும் சமஷ்டி முறைப் பண்புகள்"** மற்றும் **"ஜனாதிபதி அரசாங்க முறைப் பண்புகள் மற்றும் கபினற் அரசாங்க முறைப் பண்புகள்"** ஆகியவை கலந்த வகையில் காணப்படும் அரசியலமைப்பு முறைகளையும் அவற்றை சிறப்பாக பின்பற்றும் **இரு** நாடுகளையும் குறிப்பிடுக.

1) ……………………………………………, ………..……………………………………………
2) ……………………………………………, ………..……………………………………………

41. 1) இலங்கையின் சட்ட சபைகளுக்கு தெரிவு மற்றும் நியமனம் என்னும் அடிப்படையில் இரு பிரிவான உறுப்பினர்களை முதல் முதல் அறிமுகம் செய்த **அரசியல் அமைப்பு/ சீர்திருத்தம் எது?**

2) இலங்கையை ஒற்றையாட்சி அரசாக முதல் முதலில் பிரகடனம் செய்த **அரசியலமைப்பு யாது?**

1) ……………………………………………………………………………………………
2) ……………………………………………………………………………………………

42. 1) சோல்பரி அரசியலமைப்பின் கீழ் ஜனப்பிரதி நிதிகள் சபையில் நியமன உறுப்பினர்கள் எத்தனை பேர் காணப்பட்டனர்

2) சோல்பரி அரசியலமைப்பின் கீழ் செனற் சபைக்கு நாம நிறைவேற்றாளரால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் **எண்ணிக்கை யாது?**

1) ……………………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………………

43. இலங்கையில் 1978ம் ஆண்டு யாப்பின் கீழ் இலங்கை தனி அங்கத்தவரைக் கொண்ட ஓர் தேர்தல் தொகுதி மற்றும் பல அங்கத்தவர்களை உள்ளடக்கிய பல தேர்தல் தொகுதிகளாக கொள்ளப்பட்டு நடாத்தப்படும் தேர்தல் முறைகள்/ தேர்தல் சந்தர்ப்பங்கள் **ஒவ்வொன்றை** முறையே குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………………

44. 1) இலங்கையில் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் 17வது சீர்திருத்தத்தில் அறிமுகம் செய்யப்பட்ட அரசியலமைப்புப் பேரவைக்கு பதிலாக 18 ஆவது சீர்திருத்தத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட அமைப்புக்கு வழங்கப்பட்ட பெயர் யாது?

2) 19 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் கீழ் அரசியல் யாப்புப் பேரவையின் உத்தியோக பூர்தவ தலைவர் யார்?

1) ……………………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………………

45. 1) இலங்கையில் மாகாண சபை முறையினை உருவாக்குவதற்கு அடிப்படையாக அமைந்த உடன்படிக்கையை குறிப்பிடுக.

2) மாகாண சபை உருவாக்கம் தொடர்பாக இரண்டு சீர்திருத்த சட்டங்கள் அடிப்படையாக அமைந்தன. அவ் **இரண்டு** சீர்திருத்தசட்டங்களையும் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………………

46. 1) பணிக்குழு முறைமையின் பழமைக் கோட்பாட்டினை முன்வைத்த சமூகவியல் சிந்தனையாளரைக் குறிப்பிடுக.

2) பொதுக் கொள்கை கற்கையானது **இரண்டு** வடிவங்களைக் கொண்டுள்ளது. அவற்றைக் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………………



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

47\. 1) பொதுக் கொள்கையானது ஒரு கற்கை நெறியாக முதல் முதல் ஆரம்பிக்கப்பட்ட **நாட்டினை** குறிப்பிடுக.

2) பொதுக் கொள்கை உருவாக்கம் மற்றும் அமுலாக்கம் தொடர்பான யாப்புறு தன்மையை பரிசீலிக்கும் அதிகாரம் வாய்ந்த **ஸ்தாபனத்தை** குறிப்பிடுக.

1) ........................................................................................................

2) ........................................................................................................

48\. 1) இலங்கையில் அரசியல் யாப்பு விவகாரங்கள் தொடர்பாகச் செயற்படுவதற்கு நீதி முன் புனராய்வு அதிகாரத்துடன் கூடிய தனியான நீதி மன்ற அமைப்பை ஸ்தாபித்த **அரசியல் யாப்பை** குறிப்பிடுக.

2) இவ்வாறு நீதி முன் புனரய்வு அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட அந்த **நீதி மன்ற அமைப்பை** பெயரிடுக.

1) ........................................................................................................

2) ........................................................................................................

49\. தாராள ஜனநாயகத்திற்கு அடிப்படையான காலகால தேர்தல் முறைக்கு அடிப்படையாக கொள்ளப்படும் நியதிகளுள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

1) ........................................................................................................

2) ........................................................................................................

50\. 1) தாராண்மை ஜனநாயகத்தின் பிரதான அம்சமாக கொள்ளப்படும் "சட்டவாட்சி" இரு பிரதான எண்ணக்கருக்களை அடிப்படையாக் கொண்டது. அவ் எண்ணக்கருக்களுள் **ஒன்றினைக்** குறிப்பிடுக.

2) தடைகளும் சமன்பாடுகளும்" தத்துவத்தை ஆட்சி முறையின் அடிப்படை பண்பாக கொண்டு செயற்படும் நாடு **ஒன்றிற்கு** சிறப்பான உதாரணம் குறிப்பிடுக.

1) ........................................................................................................

2) ........................................................................................................

.

(50 x 2 = 100 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 5th Term Examination – 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| அரசியல் விஞ்ஞானம் II<br>Political Science II | Three Hours<br>Gr -13 (2022) | 23 | T | II |

**அறிவுறுத்தல்**

- இவ்வினாத்தாள் I, II, III என மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.
- பகுதி I இலிருந்து குறைந்தபட்சம் ஒரு வினாவும் பகுதி II இலிருந்து குறைந்த பட்சம் இரண்டு வினாக்களையும் பகுதி III இலிருந்து குறைந்தபட்சம் ஒரு வினாவையும் தெரிவு செய்தல் வேண்டும்.
- ஏனைய ஒரு வினாவை பகுதி I, II, III என்பவற்றில் ஒன்றில் இருந்து தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.
- ஒரு வினாவிற்கு 20 புள்ளிகள் வீதம் மொத்தம் 100 புள்ளிகள்

## பகுதி - I

1. 20ம் நூற்றாண்டில் **"அரசியல்"** என்ற எண்ணக்கருவின் விருத்திக்கு வழிவகுத்தது என்ற வகையில் பெண்ணியல் வாத அணுகுமுறையை விளக்குக. (20 புள்ளிகள்)

2. i) புராதன அரசாட்சி முறை ஒன்றின் பண்புகளை வெளிப்படுத்துக. (05 புள்ளிகள்)
   ii) நவீன தேசிய அரசினை வரையறை செய்க. (05 புள்ளிகள்)
   iii) சமூகத்திற்கு அரசு ஒன்றின் இன்றியமையாமையை விளக்குக. (10 புள்ளிகள்)

3. பின்வருவனவற்றில் எவையேனும் **இரண்டினை** ஆராய்க.
   i) கலப்பு அரசாங்க முறையில் அமைந்த நிறைவேற்றுத்துறை
   ii) அர்த்த சமஷ்டி முறை ஒன்றின் பண்புகள்
   iii) குடியரசு வாதம்
   iv) பாசிச அரச முறையின் பிரதான பண்புகள் (10x2 = 20 புள்ளிகள்)

## பகுதி - II

4. 1931 டொனமூர் சீர்திருத்தங்களால் உருவாக்கப்பட்ட சர்வசன வாக்குரிமையின் தாக்கங்களை அல்லது விளைவுகளை ஆராய்க. (20 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

5. 1947 சோல்பரி யாப்பு மற்றும் 1972 முதலாம் குடியரசு யாப்பு என்பவற்றின் சட்டத்துறை மற்றும் நிறைவேற்று துறை என்பவற்றுடன் தொடர்புபடுத்தி பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** ஒப்பிட்டு ஆராய்க.
    i) அரசியல் நிறைவேற்று நிர்வாகம்
    ii) நாம/ பெயரளவு நிறைவேற்று நிர்வாகம்
    iii) நிரந்தர நிர்வாகம்
    iv) சட்டத்துறையின் இறைமை (10x 2 = 20 புள்ளிகள்)

6. 1978 அரசியல் யாப்பின் கீழ் நெருக்கடி காலம்/ இடைக் காலங்களில் வெற்றிடமாகும் ஜனாதிபதிப் பதவியை மீழமைக்கும் விதிமுறைகளையும், ஜனாதிபதியை பதவி நீக்கும் யாப்பு சார் ஏற்பாடுகளையும் விளக்குக. (20 புள்ளிகள்)

7. 1978 யாப்பின் தேர்தல் முறையின் பிரகாரம் சட்டத்துறை உறுப்பினர்களின் தெரிவு முறையுடன் தொடர்புபடுத்தி பின்வருவனவற்றை விளக்குக.
    i) தேர்தல் தொகுதி/ தேர்தல் மாவட்ட பிரிப்பு முறை (5 புள்ளிகள்)
    ii) வேட்பு மனுதாக்கம் செய்யும் முறை (5 புள்ளிகள்)
    iii) வாக்களிப்பின் பின் வெற்றி பெற்ற பிரதிநிதிகளை தெரிவு செய்யும் முறை (10 புள்ளிகள்)

## பகுதி – III

8. "அதிகாரவேறாக்கம் மற்றும் சமநிலை தலையீடுகள் என்பன ஜனநாயகத்தின் வெற்றிக்கு வழிவகுக்கும்" என்பதை **எடுத்துக்காட்டுக்கள்** மூலம் விளக்குக.
(20 புள்ளிகள்)

9. சமீப காலத்தில் பிரித்தானியா தனது ஒற்றையாட்சிப் பண்பில் இருந்து நழுவிச் செல்லும் போக்கினை ஆராய்க.
(20 புள்ளிகள்)

10. பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டிற்கு** சிறுகுறிப்பு எழுதுக.
    i) முரண்பாட்டு நிலைமாற்றம்
    ii) பொதுக் கொள்கை உருவாக்கத்தில் சிவில் சமூகத்தின் வகிபங்கு
    iii) பொதுக் கொள்கையில் சட்ட மற்றும் நீதித்துறையின் தாக்கம்
    iv) பன்மைத்துவ அணுகுமுறை
    v) அமுக்கக் குழுக்கள்

(10 x 2 = 20 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk